உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.



திருச்சிற்றம்பல வெண்பாவந்தாதி, திருவாரூர் பாதி திருவொற்றியூர் பாதி வெண்பாவந்தாதி, திருவாரூர் மருந்து வெண்பாமாலை:

இவை

திரிசிரபுரம், வித்துவசிரோமணியாகிய

ம-௱-௱-ஸ்ரீ,

சி - தியாகராஜசெட்டியா

ரவர்களால்

இயற்றப்பட்டு,

கும்பகோணம்

கவர்ன்மெண்டு காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே - சாமிநாதையரால்

சென்னை சூளை

தொண்டைமண்டலம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

1888.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.



திருச்சிற்றம்பல வெண்பாவந்தாதி.



காப்பு.

பூமேவு செம்பொற் பொதுவினடிக் கும்பெருமான்
பாமேவந் தாதி பகரவே—நாமேவு
மற்பகத்தின் மேவி யமரு மொருகோட்டுக்
கற்பகத்தி னம்பொற் கழல்.

சமயாசாரியர்.

மாண்டபுகழ்க் காழி மறைக்குழவுஞ் சூலைகொடிக்
தாண்டவர சுந்தரநா வலனு - நீண்ட
திருவாத வூர்வேதச் செம்மலுமென் ஞான்று
மொருவாத வூரொன் னுளம்.

தீக்ஷா குரு.

துன்னுபெருஞ் செல்வத் துறைசை கயிலையென
மன்னி யமருமெழின் மாணிக்க - மின்னுபுகழ்ப்
பீடார் குருசுப் பிரமணிய தேசிகன்சீர்
பாடார் படித்தென் பயன்.



நூல்.

சீர்பூத்த வம்பலத்திற் றேவிமலர்க் கண்களிக்க
நார்பூத்த வின்ப நடநவிலுங் - கார்பூத்த
கண்டன் மறைச்சிலம்பு காட்டு மலர்ப்பாத
முண்டுதுணை நாயே னுயிர்க்கு. (க)

உயிரோ வுயிர்த்துணையே யுண்ணத் தெவிட்டா
வயிரோதீங் கண்டே யமுதே - செயிரோ
மருவாச்செந் தேனேபொன் மன்றத்தி லாடு
மொருவாயான் றொண்ட னுனக்கு. (உ)

உனக்கடிமை யாவொன்று மோங்குதில்லை நம்மா
வெனக்கிறைநீ யென்று மிசைப்பேன் - மனக்கிசைய
உன்னை யடிபே னொருநாண் மறப்பேனோ
வன்னையே யப்பா வருள். (ங)

அருட்பிழம்பை யானந்த வாழியையஞ் ஞான
விருட்பிழம்பைப் பாற்று மினனைத்-தெருட்பிழம்பை
யுற்றாரே பற்றுமன்றத் தும்பர் பெருமானை
மற்றாரே பற்ற வலர். (ச)

வல்லார் முலைச்சசியோன் வாழ்வுமயன் மால்வாழ்வும்
பல்லார் பணியம் பலக்கூத்த - னெல்லார்
மலரடியை வாழ்த்தி வணங்குபே ரன்ப
ரலர்பெரிய வாழ்விற் கணு. (ரு)

அணுமலை யாக வணுவாய் மலையே
நணுமணு வாக நகமாய்ப் - புணரவல

னேவினெழிற் பொன்மன்றத் தின்பநடஞ் செய்பெருமா
னேவனவ னும்பர்க் கிறை. (௬)

இறைவா வுவந்தேத்து மின்பவன்ப ருள்ளத்
துறைவாய்நீ யெல்லா முணர்வாய் - மறைவாழ்த்தும்
பொன்னம் பலவாநின் பூங்கழல்சேர் நாயேனுக்
கின்னம் பலவா விடா. (௭)

இடாகெடுமோ றெண்ணுதியே லென்னினிய நெஞ்சே
சுடர்சடைமேற் கங்கை பனிக்க - நடநவிலு
மம்பலத்தான் மேருவில்லாக கம்பலத்தா னின்பாப
நம்பலத்தான் சீரோ நவில். (௮)

நவிலுமறைக் கெட்டாத நல்லமணி நாலவா
கவிபுகலக கேட்டுக களிக்குஞ் - சவிமணிசீர்
குன்றுப்பே ரின்பங் கொடுக்குமணி செங்கனக
மன்றாடு மெண்கண் மணி. (௯)

மணிகண்டா வம்பல வாணா வருத்தும்
பிணிகண்டு நெஞ்சிரக்கம் பேணாய் - பணிகண்ட
பூணாப்பொன் மன்றாடும் புண்ணியா நீசற்றுக
காணாய்நா யேன்மறைந்த கண்.

கண்டொளிமாய்த் தன்பர் கவிபுகலக் கேட்டடியேன்
கண்ணொளி மாய்க்கக் கருதினாய்- பண்ணொளிரப்
பாடவறி யேனம் பலவரதா நின்னடனை
நாட வொளிர்கண் ணலம். (௧௧)

நலமொன் றுனக்குரைப்பே னன்றாவே கேட்டி
பலமொன்று பேரம் பலவன் - வலமொன்று
சூலத்தான் மால்குருதி துன்னிநிறை யுங்கரக
பாலத்தான் பொன்னடியே பாடு. (கஉ)

பாடே னினியகவி பாடித் திருமுன்னின்
றாடேன் மலர்கொண் டருச்சியே - னீடுமறை
போற்றுகழல் சென்னி புனையேன்பொன் னம்பலவா
சாற்றடியே னுய்யுஞ் சரி. (கங)

சரிந்த பவளச் சடைதிசை யெல்லாம்
விரிந்தாடக கங்கைதுளி வீசப் - புரிந்தநட
மன்றத்தான் முப்புரங்கண் மாயத் தவராம்பொற்
குன்றத்தா னெங்கள்குணக் குன்று. (கச)

குன்றெடுத்தான் காணாத கோமான்பொற் குஞ்சிதத்தாண்
மன்றெடுத்து நின்றாடு மாதேவ - னென்று
மிறைவ னெளியேமுக் கேத்துமறை தோறு
றைவன் பொருளாகி நின்று. (கரு)

றேன் றிருமுன்னர் நின்று நெடுங்கருணைக்
ற யெனவழைத்துக் கும்பிட்டேன் - மன்றேய்ந்த
னந்தக் கூத்த னழியாத முத்திநில
மேனந்த நல்கா னெனக்கு. (கசா)

கும்பிடவே முத்திநலங் கூடு மெனமறைக
ணம்பிடவே சாற்றுகின்ற நன்மையினென் - கம்படுவெ

திபெழுத்னித நீரெழுத்தாச் செய்பிரமா வோனாந்து
பாயெழுத்தான் சிற்றம் பலம். (கஎ)

சிற்றம் பலத்தாடுஞ் செல்வா சிறியேன்செய்
குற்றம் பொறுத்தாள்வாய் கோமானே - குற்றம்
பொறுப்பாயேற் பொல்லான் பொறுத்தானென் றன்னை
யொறுப்பா ரெவரிங் குளர். (கஅ)

உள்ளமே நீகொ ளுறுதி யிதன்மேலென்
கள்ளமே யென்றுங் கலவாது - வெள்ளஞ்
சடையணிந்த வம்பலவன் றாட்கமலப் போதைத்
தொடையணிந்த பாவாற் றுதி. (ககூ)

துதிப்போ மவன்புகழே சொல்லுவோமோ வாது
மதிப்போமெஞ் ஞான்று மறவோம் - கதிக்கே
புகவிடுமோ மன்றாடும் புண்ணியனெல் லோரும்
நகவிடுமோ நெஞ்சே நமை. (உ0)

நமர்கா ணமனுக்கெ னம்மிடத்து வேலை
யமரர்பணி தென்புலியூ ரத்தன் - றமராஞேம்
அஞ்சா தடர்த்தா லறைவோ மயர்த்தனைகொ
லெஞ்சாதெண் மாணிசெய லென்று. (உக)

என்பரவம் பூண்ட விறையைப்பொன் னம்பலத்துத்
தன்பகலக் கண்டு தொழுதேத்து - மன்ப
ரடிட்பங் கடப்போதை யம்பொன் முடியா
முடிப்ப ரமரர் முடிக்கு. (உஉ)

முடியாப் பெருவாழ்வே முன்னவா வென்றும்
வடியாத வானந்த வாரி - கடியாரும்
பூங்கொன்றைத் தாமா புலியூராய் நாயேனைத்
தாங்கொன்றைத் தாரீ சரண். (உ௩)

சரமொன்று தொட்டுத் தழல்விழிக்கு நேராய்ப்
புரமொன்ற வெய்த புதல்வன் - றிறமொன்றக்
காவானைக் காவென்றல் கைவிட்டுத் தென்புலியூர்
மூவானை நன்னெஞ்சே முன்னு. (உ௪)

முன்னுவாய் நெஞ்சே முடிந்தபவ மெத்தனையோ
வின்னும் வருபவங்க ளெத்தனையோ - பொன்னம்
பலவனைக்கண் டேத்திப் பவந்தொலைத்தல் செய்யா
தலமருவா யென்னேன் வறை. (உ௫)

அறைகூவி நின்றே யமருவந் தாண்ட
விறைவர் பலவ ரிறந்தார் - நிறையோத
நஞ்சமுண்டுஞ் சாவாத நம்பனைப்பொன் னம்பலத்துத்
தஞ்சமென நெஞ்சேநீ சார். (உ௬)

சாரும்பே ரின்பநலந் தாரணியீர் நும்மைவிட்டுப்
பேரும் பிறவிப் பெருந்துன்பம் - யாரு
மதிக்கும் பெருமான்செய் மாணிக்கக் கூத்தைத்
துதிக்கும்பொன் மன்றிற் றொழின். (உ௭)

தொழுதுந் துதித்துந் துகளில்லன்பு தாவென்
றழுதுநினை யன்ப ரடைந்தார் - முழுது

மறமே புரிவேன் மறவிக்கென் சொல்வே
னறமே திகழ்புலியூ ராய். (உஅ)

ஆயேன்சி வாகமத்தை யாய்ந்தார் பணிபுரியேன்
பேயேனுப் தார்போற் பிதற்றுவேன் - றாயேனு
மல்லேலனெவ் வாறுன்னை யாப்மலர்கொண் டர்ச்சிப்பே
யெ[illegible]லாய்பொன் னம்பலவா நான். (உகூ)

உள்[illegible]ருக்க நீயிருக்க நாமம் பலவிருக்கப்
கள்[illegible]ருக்க நின்பெருஞ்சீர் பாடிடேன் - பூவிருக்கும்
[illegible]ன்றையாய் மன்றிடைநின் கூத்துந் தரிசியே
தெ[illegible]ன்றையா யானுய்கு வேன். (௩0)

தா[illegible]று பலபவமேற் றின்று வுறல்வேண்டு
ம[illegible]றுவென் கண்ணுண் மகிழ்வே - தேதேறதா
புக[illegible]ன்னும் பிரான்மன் றிடைச்செய் நடங்கண்டு
நக[illegible]றும்பே றின்படையா மல். (௩௧)

நம[illegible]னோய் துரக்கு மவிபவங்கண் மாற்றுங்
யம[illegible]ர்கானு தென்றுங் கரக்கு - மலரிமையக்
அ[illegible]னறின் முளைத்த கொடிபடர்ந்த வாமத்து
செ[illegible]றி னடிக்கு மருந்து. (௩௨)

எ[illegible]ந்தே பவப்பிணிக்கு மன்றத்தி லாடு
அ[illegible]ந்தத் தெவிட்டா வமுதே - பொருந்தார்
[illegible]ரமெரித்த முக்கட் புனிதா நிற் பாட
[illegible]ரமடியே னுக்கருளு வாய். (௩௩)

வாரணிந்த கொங்கை மலைக்குமரி கண்டுவக்கச்
சீரணிந்த மன்றிற் றிருநடனை - நீரணிந்த
பெம்மான் புரிவன் பெறும்பே றிதன்மேலெ
னம்மாகண் டேத்த லழகு. (௩௪)

அழுத மறைமழலைக் கம்மை முலைப்பால்
பழுதகலத் தந்தபைம்பொற் பாண்டங் - கழுவுபுனல்
உண்ணுந் தவமேனு முண்டோபொன் னம்பலவா
வெண்ணுமடி யேனுக் கியம்பு. (௩௫)

இயலார்ந்த பல்புலவோ ரேத்துமிறை வாபெண்
பயலார்ந்த மேனிப் பரமா - மயலார்ந்தோர்
காணாத வம்பலவா கன்னெஞ்சே னன்பில்லே
னாண தடிமையென்பே னான். (௩௬)

நானே தவமுடையே னானே தவமுடையேன்
றேனே யமுதே செழும்பாகே - யானைத
செல்வமே யென்றுகவி செப்பச்சிற் றம்பலத்தா
னல்வரந்தந் தாண்டமையா னன்று. (௩௭)

நன்றோ புலவீர் நலமிலாப் பேதையரைக்
குன்றேய்பு யாவென்று கூறுவீர் - கொன்றைமலர்த்
தாமத்தாய் தென்புலியூர்ச் சங்கரா வெற்பரசி
வாமத்தா யென்றன் மறந்து. (௩௮)

மறந்துநினை யன்றி வழுத்துமோ வென்னை
யிறந்து பிறப்பானை யென்றுஞ் - சிறந்ததே

மாங்கனியுண் வாயுணுமோ வன்காஞ் சிரங்காய்போன்
ஞோங்கனிகர் மன்ரு யுவந்து. (௩௯)

உவந்துநினைப் பூசை யுஞற்ற லொழிந்தேன்
பவந்தொலையு மாறு படேன் - றவந்தானுஞ்
சிந்தியேன் றென்புலியூர்த் தேவாநின் சேவடிகள்
வந்தியே னுய்வேன்கொன் மற்று. (௪0)

மற்றென் னுறல்வேண்டும் வந்தித்தான் முத்திலஞ்
சிற்றம் பலத்தாடுந் தேவர்பிரா - னுற்றருள்வ
னென்றால் வினையா ரெவரோ மடநெஞ்சே
சென்றாடல் கண்டுகதி சேர். (௪௧)

சேரார் பவப்பெருநோய் தீராரெவ் வாறந்தோ
வாரார்பே ரானந்த வாரிபுக - வீரார்ந்த
செஞ்சடையா ஞொருவர் சேவிக்க மன்றாடு
மஞ்சுடைய தில்லை வனம். (௪௨)

வனமடைந்து புன்சருகு வன்காய் கிழங்குண்
டினவினைதீர்ந் ஞோர்கா லெடுத்துங் - கனலிடையே
சேர்ந்துந் தவஞ்செயலென் றில்லைமன்றி லெம்பெருமா
ஞர்ந்நடங் காண லயர்ந்து. (௪௩)

அயில்வே லனுக்கு மரிமதர்க்கட் பாவாய்
மயிலேய்ப்மென் சாயன் மடந்தாய் - குயிலேயின்
சொல்லா யெனப்பலகாற் சொல்லும்பொன் மன்றாடல்
வல்லா னெனிற்குறையென் வாய்க்கு. (௪௪)

வாய்மை யன்பு சற்றுமிலேன் வன்னெஞ்சப் பாறையிடைச்
சேய்மையின்றிப் பூத்துத் திகழுமோ - தூய்மைதிகழ்
குன்றாத பேரன்பர் கோதிலுள வாவிமலர்
மன்றாடி பூந்தா மரை. (௪௫)

மறையெகினம் வான்பறந்தும் வன்றிமண் கீண்டும்
பிறைமுடியுந் தாளும் பெறும - னிறைபெருமான்
பற்றாத சிற்றம் பலத்துளெங்க னின்றாடி
முற்று முலையாய் மொழி. (௪௬)

மொழியத் தெவிட்டா முதல்வநின்சீர் முற்று
மொழியப் புகல்வேனென் றுன்னி - னிழிவுடைய
சிற்றெறும்பு வாரிமுற்றுஞ் சேரவுண்ண வுன்னுதே தா
சற்றுணைசிற் றம்பலநா தா. (௪௭)

தாமரைக்கண் ணுன்றொருவர் தாளிட்டார் மற்றொருவர்
மாமறைக்கண் ணுன்கண்வைத் தாரிவரு - ளாமொருவர்ப்
பொன்னடிவைத் தாயொருவர்ப் போக்கினை யாழிகொடுத்
தென்னவற மன்றுடையா யீது. (௪௮)

ஈதே கருணை யிறைவாபொன் னம்பலவா
தீதே தமியனனி செய்திடினும் - போதே
யனையநின்பொற் பாத மடைந்தபின்னுந் தீய
வினையகற்றி யாளா விடின். (௪௯)

விட்டோம் பயனில்லா வீணரு றவெல்லாந்
தொட்டோமின் பஞ்செய்யுந் தொண்டுகளை - நட்டோநம்

றுண்டர் பெருங்குழுவைத் தூய நடராச
னண்டர்தொழு மன்ற மடைந்து. (ருo)

அடைந்தா ரெவரேனு மானந்த வெள்ளங்
குடைந்தாட வம்மின்கள் கும்பிட் - டடைந்தோட
நம்பிறவி யோட்டுமின்க ளென்று நுவலுதல்போ
லம்பலத்தி லாடு மரன். (ருக)

அரவமைந்த செஞ்சடையா னம்பலவ னென்னே
புரவமைந்த வள்ளன்மை பூண்டு - மிரவமைந்தே
பேற்றான் றலைக்கலங்கை யெண்ணான் கறஞ்செய்யோர்
கூற்றானுண் ணணங் கொள. (ருஉ)

கொள்ளக் குறையாத கோதி லருட்கடலே
யெள்ளப் படாதபே ரின்பமே - வெள்ள
முழுத்த சடைமுடியாய் முன்னவா மன்றி
லாடித்தகழு ணயேற்கு நல்கு. (ருங)

நல்குவா யென்றுன்னை நம்பினே னன்பருளத்
தல்குமிரு ளோட்டு மவிரொளியே - மல்குதிருச்
சிற்றம் பலவவருள் செய்யாய் சிறியேன்செய்
குற்றங் குணமாகக் கொண்டு. (ருச)

கொண்டோம்பொன் மன்றுடுங் கூத்தன் கழல்சிரமேல்
விண்டோ நெடுந்துயர்செய் வெம்பிறவி - யண்டருள்ளே
நம்பேறு யார்பெற்றார் நாடித் துருவிடினும்
வம்பேறு கொங்கைமட வாய். (ருரு)

வாயார வாழ்த்துவார் மன்னுகடங் கும்பிடுவார்
தோயாவா நந்தந் துளைகுவா - ரோயாது
நின்றுருகு வாரைய நின்னன்பர் யானும்பொன்
மன்றுபுக நின்றாண் மதித்து. (சரு)

மதிதவழுஞ் செஞ்சடையும் வான்புலவர் பாடுந்
துதிதவழும் பூந்தாளுந் தோற்றிக் - கதிதவழு
மம்பலத்தி னின்றாடு மப்ப னயன்றிருமால்
வெம்பிவிண் மண் கீள விடுத்து. (சசு)

விடவரவஞ் சென்னி மிலைந்து புலியும்
படவரவுங் கண்டு பணிய - நடநவில்வோ
னம்பலங்கண் டேத்து மதுவே யறிஞரடை
செம்பலன்வே றென்னெஞ்சே தேர். (சஎ)

தேர்ந்துணர்ந்த மெய்ஞ்ஞானச் செல்வ ரெலாங்கூடி
வார்ந்தபுகழ் வாயார வாழ்த்தியே - நேர்ந்துநின்றாண்
மன்றடைந்து கும்பிட்டு வாழ்வுற்றார் யானைய
வென்றடைவே னின்றா ளிணை. (சஅ)

இணையில்லா நின்னன்ப ரெய்தும் பெருவாழ்
வணையநா யேனெண்ணி னைய - பணையிற்
குரண்டம்வான் கங்கைநதி கூடநினை யாதோ
வரண்டவாத் தென்புலியூ ராய். (சகூ)

ஆயர் மனையி லளைதிருடிக் கட்டுண்ட
மாயன்பொன் மன்ற மருவியுந் - தாயனையான்

றன்னைக்கும் பிட்டின்பஞ் சாரா திலுந்துயில்வா
னென்ன புதுமை யிது. (சுக)

இதுவோ பெருமை யிரணியமன் றாடும்
விதுவேய் சடில விமலா - மதுவேய்நின்
பொன்னிதழிப் பூந்தார் புரிந்தருளாய் செம்பவள
மன்னிதழி யுய்யும் வணம். (சுஉ)

வண்ணங் கரிய மணிமிடற்றாய் துன்புறுவே
புரவண்ணங் தெரியா திருக்கின்றாய் - பண்ணைவயல்
பேறன்றத் தாடு மரசே நினையெல்லா
கூற்ரர்பெருமா னென்பதெவ்வா றோது. (சுங)

கொள்ள துணர்ந்த வொருவருண ஞானப்பாற்
யெதாரா மற்கொடுத்த கோமானே - தீதாரா
முடிறாடு மாமணியே மாணிக்க மேயடியேன்
வாடிறாநோய் தீர்த்தடிமை கொள். (சுச)

நல்லாண்டா லெனையடிமை கோபிப்ப ரோவடியார்
தல்லண்டா வருட்பெரிய சாகரமே - கண்டாா
சிற்றியாப்பொன் மன்றாடும் பெம்மானே தீர்நோ
குரியாய் வருத்து மெனை. (சுரு)

கொடினைநின் னுள்ள மிரங்கா திருக்கின்றப்
வின்னனை மணியே புகழமுதே - யின்னே
நம்மினைநோய்தீர்த் தாளின்மன் றீசா நினக்குப்
வம்பவேறுண் டோபெருஞ்சீர் பேசு. (சுசு)

பேசுவே னின்பு நஞ்சீர் பேயேனை யாட்கொள்வாய்
கூசுவேன் மற்றையர்சீர் கூறவே - நேசமொடு
நம்பினனைக் கைவிடுத லல்லறமோ மன்றுடிம்
எம்பெருமா னீசற் றிசை. (சுஎ)

இசையார்ந்த தென்றில்லை யீசாநின் னன்பர்
நசையார்ந்த பாக்க னவில்வார் - வசையார்ந்த
நாயேனவ் வாறு நவிலுமன் புள்ளேனே
தீயேனென் செய்வேனீ செப்பு. (ருஎ)

செப்பும் பலமறையுஞ் சென்றேத்துந் தில்லைவனத்
தொப்பு முயர்வு மொருவிநிற்கு - மப்பனே
நின்னடியோன் றுன்புறுத னோகண்டான் மற்றையார்
உனனைபே சாரோ வுரை. (ருஅ)

உரையாத பொன்னே யொளிர்சாணை யிட்டுக்
கரையாத மாணிக்கக் கல்லே - விரையார்ந்த
வார்குழலா ளோக்கப்பொன் மன்று டருட்கடலே
யார்துணைநா யேனுக் கருள். (ருகூ)

அருளை யுருவா யமைந்திட்டா னின்று
பொருளாய்நின் றாடல் புரிந்து - தெருளாய
நோக்கம்மை நிற்கு நுவலானோ மன்றுடை
காககவென்றே யென்றுயரங் கண்டு. (சுo)

கண்டுந்தே னுப்பாலுங் காமர் பசுங்கிளியும்
கொண்டுவமா னஞ்சொல்லக் கூடாத - மண்டுகுவை

யென்றுய்சொ னின்செவிகட் சேறுமை யென்கொடுமை
மன்று யமரர்தலை வா. (௭௨)

வாமான் மறையாக்கொண் மாதேவா மன்றுடைக்
கோமானே யெங்கள்குணக் குன்றமே - யேமாந்து
நின்னருளை நாடியே நிற்பே னடைந்திலேன்
என்ன வறுமை யியம்பு. (௭௩)

இயம்ப னனியினிக்கு மின்னமுதே பூவார்
னெஞ்சலவு தில்லைக் கரும்பே - நயங்குலவ
ஆர்ப் புகழு நெடும்பாக் கியம்பெற்றேன்
மோன குறைசொ லெனக்கு. (௭௪)

ஓதாகு நின் பூந்தாளன் பெய்தாத தென்கொல்
கோமின் பருளு மணியே - புனக்கொன்றைப்
மன்மா மன்றுடும் புண்ணியா வானமர
குன்றால் கயிலையிறை யே. (௭௫)

கொாநின் னுமை மியம்பத் தெரிந்திலேன்
தனாவு பாடலெங்ஙன் செப்புவேன் - மாதோடு
பிறு தில்லை மன்றுடு நின்மலா நின்னருளை
யுாறுபெறு வேன்றீய னேன். (௭௬)

எ கொம் பென்று மிலங்கு மணிமார்பா
பெ பிறைசூவணிக் கோமானே - கானத்
யெம்வேடர் கோமா னுரைக்குமின் சொல்லோ
பிழமன்றத் தாயென்சொ னிற்கு. (௭௭)

நின்னைப் பிதாவென்று நின்வாமத் தேய்ந்தமலைப்
பொன்னையன்னை யென்றும் புகன்றமறை - யென்னை
யொழித்துச்சொல் லிற்றே வுவந்துபொன்மன் றுடுஞ்
சுழித்தபுனற் செஞ்சடையாய் சொல். (எஅ)

சொல்லச் சுருங்காத தூயபுக ழாய்மதனை
வெல்லத் திறந்த விழியுடையாய் - கொல்லுமுனைச்
சூலத்தாய் தென்றில்லைத் தொன்னகராய் நற்கரக
பாலத்தாய் நாயேனைப் பார். [illegible]

பார்சூழ்தென் றில்லைப் பரமா செழுங்கொன்றைத்
தார்சூழுஞ் செஞ்சடிலச் சங்கரா - சீர்சூழ்ந்த
நின்னடியா ரேத்தி நிகழ்த்தியிடு நின்செய்ய
பொன்னடிக்கு யானோர் புகல். (சுகூ)

புகலுமறை யேத்தும் பொதுநடிக்கு மெம்மான்
இகலு மதனை யெரித்தும் - அகமகிழ
வாமத்து மின்கொண்டாய் மன்னுதுற வோருன்னைக்
காமங்கொண் டேத்தலென்ன காண். (எ0)

காண்போர்க்கு வீடளிக்குங் கற்பகமே நிற்றுதிக்கு
மாண்போர்க் கடையயனு மற்றுண்டோ - பூண்பாரக்
கொங்கையுமை காணமன்றிற் கூத்தாடுங் கோமானே
செங்கையன லேந்துமர சே (எக)

சேவேறி யன்பர்முனஞ் செல்லுமர சேவேத
மாவேறிப் பாண்டியனை வாழ்வித்தாய் - பூவேறி

வண்டுதுவைக குஞ்சோலை மன்றூடு மாமணியே
யண்டுமெனை யாடல்குறை யா. (௪௩)

ஆத்தி மரத்தி னடியினீ சென்றிருந்
தேத்துதொண்ட ரீன்ற விளஞ்சேயைக் - காத்தலொழிந்
தீர்ந்தாக்கச் செய்தாய்மன் றீசாநின் ஞேர்பாகஞ்
சேர்ந்தாள் பொறுத்தாளோ செப்பு. (௪௪)

செ[illegible]பான் வரைவளைத்துத் தீயர் புரமெரித்தாய்
கயனஞ்ரான்மன் றத்தென்று மாடினைப் - வம்பொன்று
நின்னை[illegible]ம முலைப்பரவை கூடத்திற் றூதுசென்றாய்
என்னையூ டிற்செல்வா ரார். (௪௫)

எனக்[illegible]து செஞ்சடையா யணிப்பொன் மன்றூடே
மனக்[illegible]து சூலமுதற் கொண்டிருந்து - மேமோந்து
பூந்தா[illegible]னைக் கண்ணிற் றிரிபுரத்தை மூரலிற்றீ
ரோந்த[illegible]ரித்த காரணமென் ஞேது. (௪௬)

ஏதே[illegible] நின்புகழை யோதத் துணிந்தெழுந்தேன்
தீதே[illegible]ரு மென்புன்மை கொண்டருளாய் - போதாரும்
நின்[illegible]பொற் கொன்றையுடன் வெள்ளெருக்குங் கொண்ட
யென்[illegible]பொன் னம்பலத்தை யா. [னையே

ஏன[illegible]றி ஞவரசர்க் கங்கயிலைக் காட்சிதந்தாய்
கூன[illegible]றி லெலினை நலியவிடா - தையா
துறை[illegible]ல்லை மேவுஞ் சிவனே யெனையாள்
நிறை[illegible]ல்லை கொல்லோ கனை. (௪அ)

கறைமருவு கண்டத்தன் காமர்நதி யோடு
பிறைமருவு செவ்வேணிப் பெம்மான் - நறைமருவு
சோலைசூழ் தென்றில்லைத் தொன்னகரான் வெள்ளென்பு
மாலையா னீவன் வரம். (அகூ)

வரமேய்ந்த தென்றில்லை மன்னுமண் ணுண்ட
சாமேய்ந்த செங்கைத் தலைவா - புரமேய்ந்த
நின்வாய் நெருப்பிற்கு நேராகி நிற்காதோ
என்வாய் பவமா மெயில். (கூ0)

எயில்சூழ்ந்த தென்றில்லை யீசா விமய
மயில்சூழ்ந்த வாமத்து வள்ளா - லயில்சூழ்ந்த
சூலப் படையாய்நின் றொல்புகழ்சொல் லென்னையயன்
மாலப் படைப்பானோ மற்று. (கூக)

மற்றும் பெறும்பயனென் வன்னெஞ்சே பூஞ்சோலை
சுற்றுநென் றில்லைச் சுடர்மன்றி - லுற்று
நடமாடு மெம்பெருமா னற்குஞ் சிதத்தா
டமாரச் சேவை செயின். (கூ௨)

செய்யில் வளைமுரலுந் தென்றில்லைத் தொன்னகரே
மையில் கைலாய மாமலையோ - பொய்யில்லா
வேதமுடி யோதியேன் வெய்யவுள மோபரம
னேதமின்றி வாழு மிடம். (கூ௩)

இடதுமான் கொண்ட விறைவா வுதிசி
வடத்துநிழன் மேய மருந்தே - தடத்துக்

சயப்பாயுந் தில்லைச் சருந்தா வுளத்து
மயல்பாயா வண்ணமருள் வை. (சஈ)

வையம் பரவ வளரு மணிமன்றி
லையன் கழனிறுவி யானந்தஞ் - செய்யும்
திருக்கூத்தை முன்னின்று சேவிக்கு மெய்யன்
பருக்கூத்தை மெய்யில்லை பார். (சரு)

பாரிடங்கள் சூழப் படர்வனத்தி னின்றாடி
சீரிடங்கொள் செஞ்சடில நின்மலனை - சேரிடங்கொள்
வாமத்தாள் காண மணிமன்று நின்றாடி
மேமத்நா ரோத்த வினையந்து. (சசா)

இயம்பப் புகின்மன்றத் தெம்மான் பெருமை
நயம்பட்பச் சொல்ல வலமே - சயம்பப்பும்
புல்லோர் பெருமை புகலுங் கனவிடத்தும்
சொல்லோஞ்சொல் மேலாமே துணிந்து. (சஎ)

துணிந்தமறை யாகமங்கள் சொல்லப்பொன் வேணி
யணிந்த வரவ மசையத் - திணிந்தவொளி
மன்றாடி ஞானந்த வார்மதுவை யுண்டுவக்குங்
கன்றாடுங் கையுமையாள் கண். (சஅ)

கண்மணியே முக்கட் கரும்பே யிருளகற்றும்
விண்மணியே யென்றன்பர் மேவவே - பெண்மணியாம்
பாகத்தாள் காணப் பரமன் மணிப்புயப்பூ
ணாகத்தான் செய்யு நடம். (சக)

நடலை யறுத்தோ நமற்கஞ்சோம் பாசக்
கடலை யெளிதிற் கடந்தோம் - திடவன்பு
பெற்றம் பலமடைந்தோம் பேணுவோ மெம்பெருமான்
சிற்றம் பலம்வணங்குஞ் சீர். (௧00)



திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.



பண்பாவந் தாதிரைநாட் பண்ணவனைப் போற்றியொரு
வெண்பாவந் தாதி விளம்பினான் - விண்பானன்
கோடுந்தி யாகரா வுத்தமவென் றேத்தாரைச்
சாடுந்தி யாகரா சன்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வெள்ளியகொக் கிறகறுகு மதிநதிநீ
றரவாதி மிலைந்து வந்தே
யொள்ளியபூந் திருக்கைலை வீற்றிருக்கு
நடராசற் குவப்புச் செய்வ
துள்ளியவீ தென்றறிஞர் சொலவெண்பா
வந்தாதி யொன்று பன்னா
றெள்ளியசீர்த் தியாகரா சக்கவிஞ
ரோதினிது செப்பி னானால்.

திருச்சிற்றம்பல வெண்பாவந்தாதி
முற்றிற்று.



உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.



திருவாரூர் பாதி திருவொற்றியூர் பாதி வெண்பாவந்தாதி.

காப்பு.

திங்களணி செஞ்சடைமா தேவன்வெண்பா வந்தாதி
மங்கள மாக வழுத்தவின்சொ - லிங்கருளு
மாதங்க வத்திரத்து மான்முதலோர்க் கூடுறுழிக்கு
மாதங்க வத்திரத்து மான்.

சமயாசாரியர்.

அடிகளார், காழிவாய் ஞானக் கவுணியர்சூ ளாமணியு
மாழிவாய்க் கன்மிதந்த வப்பனு - மேழிசைவாய்
பாட்டுரைத்துக் கண்பெற்ற பாவலனுங் கோவையர
னேட்டெழுதச் சொற்றவனு மே.

அவையடக்கம்.

சீரூருஞ் செல்வத் திருக்கோயில் கொண்டருளி
யாரூரு மொற்றியு மார்பரன்றன் - பேரூரென்
பாடற்குற் றஞ்சிறிதும் பாராதருள்புரிவா
னூற் குலக நயந்து.

நூல்.

திருவார் கமலத் தியாகேசா வொப்பி
லொருவா வென்கண்ணே யொழிப்பாய் - கருவாய்
பிணிக்குமருந் தென்றுன்னைப் பேசலன்றி யென்கண்
மணிக்குமருந் தென்பேன் மகிழ்ந்து. (க

மகிழ்ந்தொற்றி யூர்வாழும் வள்ளான்முக் கண்ணா
நெகிழ்ந்துள்ள நின்னை நினைப்பேன் - புகழ்ந்துகவி
பாடுவனென் கண்மறைவைப் பாற்றினனென் றென்றுங்கொண்
டாடுவனென் னையா வருள். (உ)

அருளுடையே னென்றென் றறைவையறி வில்லா
மருளுடையேன் கண்ணை மறைத்த - லருளோ
திருவாரூர் வாழுஞ் சிவனே வாள்வாழ
மருவாரூர் மாய்த்தாய் வழுத்து. (ந)

வழுத்துவே னொற்றிநகர் வாழ்வேநின் றாணைஞ்
சழுத்துவே னென்று மயனோன் - கொழுத்தபுக
ழையா வரனே யடியேன் குழிவிழுந்து
நையாத வண்ண நவில். (ச)

நவில வினிக்கும்பன் னுமத்தாய் கற்ற
கவிவலவ ரோத்துகறைக் கண்டா - புவியரசா

மாரூ ரரசே யமுதே யடலாழித்
தேரூர் விடங்கவருள் செய். (ரு)

செய்ய கழலடியேன் சென்னிமிசை வைத்தருள்வாய்
வெய்யவிட முண்ட விமலனே - கைய
ரடையாத வொற்றிகே ராண்டவனே சூலப்
படையாா மலாககர ந்தப் பா. (சா)

பாவா லுனைபன்பிற் பாடேன் பரமேட்டி
பூவாலுன் பொற்பாதம் பூசியே - னோவால்
வருந்துமெளி பேறுப் வகையுண்டோ செலவ
திருந்துங் கமலையர சே. (எ)

சேவேறி வந்தருபேன் செல்லல்களை வாயமாறும்
பூவேறி னும் புகழ்புனிதா - காவேறிக
கார்தூங்கு மொற்றிகோக காபாலீ கங்காளா
நீர்தூங்கு செஞ்சடைய னே. (அ)

நேசஞ் சிறிதுமிலே னின்னடிமை யென்றுரைபபேன்
பாச மகன்றெப் படியுய்வேன - ஈசா
கமலா லயந்தமர்வாய் காராா களத்து
விமலாசா யேற்கு விளம்பு. (கூ)

விள்ளு பெருமபிறவி வேலைக் கொருவடவை
யெள்ளுவினைக் காட்டிற் கிருகவியங் - தெள்ளுபுனல்
பாய்சடையா னொற்றியூர்ப பாண்டரங்கன் வானமர
ராய்புகழான் செம்பொ னடி. (கய)

அடியடைந்தார் துன்பத் தழுந்த லழகோ
கடியரவக் கிண்கிணிப்பொற் காலா - முடியின்மதி
வைத்தாய் கமலை வரதா வநாதிமல
முத்தாவுய் மார்க்க மொழி. (கக)

மொழியத் தெவிட்டா முதல்வாநா யேன்றுன்
பொழியக் கருணை யுதவாய் - கழியப்
புகழ்வே னுனையொற்றிப் புண்ணியா வின்றே
லிகழ்வே னிரந்துண்டா யென்று. (கஉ)

என்றுமதிக் கண்ணு வெழிற்கமலை யீசாமான்
கன்று சுமந்த கரதலத்தா - யென்றுனையே
பேசப் பெறுவேனேற் பெற்றேன் பிறவிமுதல்
வீசப் பெருவான் விரைந்து. (கஙு)

விரையார் மலரிதழி வேய்ந்த விமலா
நரையார் விடையேறு நம்பா - வரையா
ரரவணிந்த வொற்றியூ ரண்ணலே நெஞ்சிற்
கரவணிந்த நாயேனைக் கா. (கச)

காம னுடல்பொடித்தாய் காலன் படவுதைத்தாய்
பூமன் சிரங்கொய்தாய் பூங்கொன்றைத் - தாமனே
சூல மழுவேன் சுமந்தாய் கனற்கண்சேர்
ப:ல கமலைப் பரா. (கரு)

பரனென்று மொற்றியூர்ப் பண்ணவனென் றுஞ்சங்
கரனென்றுங் காளகண்ட னென்றும் - வரனென்றுங்

கூறு மடியவனைக் கூற்றன்கும் பிட்டகல்வா
னேறும் பகடோ டிரந்து. (கசு)

இரப்பார் பசியா லினைவா ரெனையார்
புரப்பா ரெனவே புகல்வார் - சிரப்பாற்
சிரமேந்து தென்கமலைத் தேவே சனைமுன்
வரமேந்த வாழ்த்தாத வர். (கஎ)

வரைமகள்வா மத்தான் மணித்திரளை வாரித்
திரையெறியு மொற்றியூர்ச் செல்வன் - பிரசமலாக
காமற் பொடித்த கனல்விழியான் பூங்கொன்றைத்
தாமன்பொற் றாளே சரண். (கஅ)

சரணஞ் சரணமென்று சார்ந்தாலா ரூரா
னரணம் பொடித்தநகை யப்பன் - முரணு
ருழுவை யதளுடையா னேங்கருளா னெஞ்சே
நழுவவிடு வானோ நமை. (கசு)

நமரங்கா ளொற்றியூர் நம்பனையே சேர்மின்
பமரஞ் செறிபூப் பறிமி - னிமிரவன்றாள்
சூட்டுமினன் றேன்புகழே சொல்லுமின் றுன்பொழிய
வோட்டுமின் பேரின்ப முற்று. (உ0)

உற்றா ருனையன்றி யுண்டோ வடியேற்குப்
பெற்றாரு நீயே பெருமானே - கற்றார்கள்
பாப்பாடு மாரூர்ப் பரமேசா நோயொழித்துக
காப்பார்கள் யாரோ கனை. (உக)

கறைக்கண்டா நின்னையொரு காலு மறவேன்
பிறைக்கண்டஞ் சூடும் பிரானே - சிறைக்கலுழ
னூர்ந்தான் றெழுமொற்றி யூரா யருளுன்னைச்
சேர்ந்தார் தெளியும்வகை தேர்ந்து. (உஉ)

தேரார் நெடுவீதிச் செலவத் திருவாரூர்
சீரார சடில நிமலனே - காராருங்
கண்டநின் னன்பர்களைக் காலன் கரத்தேந்து
தண்டஞ் செயலென்னோ சாற்று. (உந)

சாற்றுதிரு நீறணிந்து தண்கண் மணிபூண்டு
போற்றுதிரு நாமம் புகன்றேத்தி - யேற்று
வருவார்தென் னொற்றியூர் வாழ்வார்க்கா ளானோர்
மருவார் கருவினிடை வந்து. (உச)

வந்திக்கச் சென்னியுண்டு வாழ்த்திடநன் னாவுண்டு
சிந்திக்க நீயுண்டு செஞ்சடைமே - லந்திப்
பிறையணிந்த தென்கமலைப் பெம்மான்றா ளுண்டு
குறையுண்டோ நன்னெஞ்சே கூறு. (உரு)

கூறுதமி ழொற்றியூர்க் கோமானுக் கென்செய்தோ
மேறு விடைமே லெழுந்தருளி - நாறுகுழ
லம்மையொடு காட்சி யளித்தருளி நன்னெஞ்சே
நம்மைப் புரந்தருள நாம். (உ௬)

நாமா தவமுடையோ நன்னெஞ்சே தென்கமலைக்
கோமா னெதிர்நின்று கும்பிடோம் - பூமாலை

சூடோ மினியகவி சொல்லித் துதியோங்கூத்
தாடோஞ் சிறிதுமித னல். (உஎ)

ஆல மிடற்றி லணிந்துமலர் மாதர்க்கு
நீலஞ் செவியி னிறுத்தினைப் - கோல
மருப்பணிந்த வொற்றியூர் வள்ளா லுனது
திருப்புகழுக் கீறுண்டோ செப்பு. (உஅ)

செப்புங் கமலைத் தியாகேசா வென்றுநீ
யொப்பு முயர்வு மொருவினை - யப்பனே
யுன்னைவிட வென்னை யொழித்தருள்வார் யார்சேயை
யன்னைவிட லன்றே யழகு. (உகூ)

அழுதபிள்ளை பாலருந்து மென்பா ரழுது
மிழுதையேன் மாட்டிரக்க மின்றே - தொழுதகையை
வெட்டுவா ரில்லையொற்றி மேவுபர மாவிதழிக்
கட்டுவா ரேணியழ கா. (௩௦)

காவேந்து பொன்னகரங் கைவிட்டுத் தென்னரூர்ப்
பூவேந்து பூங்கோயில் புக்கமர்ந்தாய் - சேவேந்து
மடனே யென்னை யகற்றிற் பழியுண்டோ
துப்பைநேர் வேணியாய் சொல். (௩௧)

சொல்லேன்கே ளேயெங்ஙன் றூவாயின் மண்ணிட்டு
வெல்வே னைனீ விடுத்தகல்வா - யல்வாய்
களத்தனொற்றி யூராளி காமற்காய்ந் தானென்
னுளத்த னருள்வலிகொண் டோர்ந்து. (௩௨)

ஓராரு நின்புகழை யோர்ந்துன்று டஞ்சமெனச்
சேராரு மின்கவிகள் செப்பாருஞ் - சீரே
திருந்துங் கமலைத் தியாகேசா மண்ணி
லிருந்தென் னிறந்தென் னியம்பு. (௩௩)

இயங்கலிக்கு மொற்றியூ ரெந்தாய்நின் னன்பர்
நயங்கலிக்கும் பாட னவிலேன் - பயங்கலிக்கு
நெஞ்சேன் கொடுநோயை நீக்கியடி யேன்முன்னின்
றஞ்சேலென் னீயே யரண். (௩௪)

அரணம் பொடித்த வழகாநா யேற்கு
மரணம் பிறப்பிரண்டு மாற்றிச் - சரணந்
தருவாயே லாரூர்த் தியாகேச னென்பே
ரொருவாது நிற்கே யுறும். (௩௫)

உற்ற நிராமயனென் றோதற்கேற் பச்சிறியேன்
பெற்ற பிணிவருத்தம் பேசினன் - முற்றுணர்ந்து
நீயறியா வொற்றியூர் நின்மலா நீயறியி
னேயறியே னன்றோ நுவல். (௩௬)

நுவலடியார் துன்பொழியா நோன்புமுனக் குண்டோ
கவலடியேன் றுன்பங் களையாய் - சுவலினிடைக்
கங்காளா தென்கமலைக் காமாரி வெற்புயிர்த்தாள்
பங்காளா வென்னே பகர். (௩௭)

பகலவன் கண்ணைப் பறித்தாய் மகத்தி
லிகலிலேன் கண்மறைத்தா யென்னே - பகையு

முறவுமிலா னென்ப துணர்த்தவோ வொற்றி
யறவிடையாய் நாயேற் கறை. (கூஅ)

அறையு மறையு மரியு மயனு
நிறையுஞ் சுரருமெதிர் நின்று - பறையுந்
துதியோநின் பூந்செவிக்குத் தொல்வாளுஞ்சே ராரூர்ப்
பதியோனா யேன்புகலும் பாட்டு. (கூகூ)

பாடும் பணியோடுநின் பாதப் பணியடியேன்
கூடும் பொருட்டடிமை கொண்டருள்வாய் - சூடும்
பிறையோய் திருவொற்றிப் பெம்மானே யார்க்கு
மிறையோ யிரங்குற் றினிது. (சo)

இனியு பசுந்தேனு மின்னமுதும் பாலுங்
கனிரசமும் பாகுங் கலந்து - நனிநின்
செவிக்கருந்த நாவலூர்ச் செம்மலோ வாரூர்ப்
புவிக்கரசே நாயேன் புகல். (சக)

புகலெனக்கு நீயன்றிப் புண்ணியா வுண்டே
னகவெடுத்து நம்பா நவில்வாய் - ககனந்
தடவுபொழி லொற்றியூர்ச் சங்கரா நாயே
னிடரொழித்துக் காப்பா யினி. (சஉ)

இனியடியே னென்செய்வேன் யாரை யிரப்பேன்
பனிமதியஞ் சூடும் பரமா - துனியகதிர்
வேலோனைப் பெற்ற விமலாவா ரூருடையாள்
பாலோ யெனதிடுக்கண் பார். (சங)

பாரளந்த மாயவனும் பங்கயத்து மேபவனு
நீரளந்த செய்யசடை நின்மலா - காரளந்த
கண்டாவென் றேத்துங் கபாலியொற்றி யூரவநு-
பண்டார மேகண்ணேப் பாற்று. (சச)

பாவலருங் காவலரும் பண்ணவரு மண்ணவரும்
பூவலர்கொண் டர்ச்சித்துப் போற்றியே - நாவலருஞ்
சீருரைக்குந் தென்கமலைத் தெய்வமே யுண்டோநின்
பேருரைக்கத் தீராப் பணி. (சரு)

பிணியென் செயுநெஞ்சே பேதுறே லொற்றி
மணிகண்டன் பாத மலரைக் - கணிகொண்டு
பூசித்து நின்று புனேந்தேத்தி யென்ஞான்று
நேசித்தோ வாம னினே. (சகா)

நினேவாயெஞ் ஞான்றுமெதிர் நின்றுகவி மாலே
புனேவாயென் ருரூர்ப் புனித - னெனேயடிமை
கொண்டா னினியென் குறைநெஞ்ச மேயனேயன்
வண்டார் மலர்க்கழலே வாழ்த்து. (சஎ)

வாழ்த்துவது நின்புகழை மன்னுநின்ரு ளிற்சென்னி
தாழ்த்துவது நின்னேமனஞ் சார்த்துவதுஞ் - சூழ்த்தபொழில்
செற்றவொற்றி யூர்வாழுஞ் செல்வத் தியாகேசா
முற்றவமி லார்க்கெளிதா மோ. (சஅ)

மோதகக்கை யாற்பெற்ற முன்னவா நாயேன்செய்
பாதக முற்றுமழற் பஞ்சன்ருே - கோதகனின்

னன்பர்களை யாரூர்த்தே வாசிரியன் காவணந்துந
துன்பகலக் கண்டு தொழின். (சகூ)

தொழுவர் செழுவார் துதிப்பார் மதிப்பா
ரழுவாரகூந் தாமவா ராகி - வழுவாமின்
றெண்டரடிந் தொண்டுசெயுந் தூப்பே றெனக்கோற்றி
யண்டாபிரா னேயருள்செய் யாய். (நிo)


ஆபாச் சிறியேனு மாய்ந்தபெரி யோருறும்பே
றோபா மகிழுமினை யெய்திலோன் - றாயா
மறியு மரவுமுதூ வைத்தாயா ரூர்வாய்
நிறியே யதனை நினைத்து. (நிக)

நன்னைத் துதித்திடுவே னிவ்வாமந் தேய்ந்தமலைப்
பொன்னைத் துதிந்துப் புகழுவே - னுன்னருமை
மக்களையு நன்கு வழுத்துவே னுளோற்றி
யககரவம் பூண்டருளே யா. (நிஉ)

ஆவா வடியே னலந்தே னணியாரூர்த்
தேவா தியாகச் செழுஞ்சுடரே - மோவாலே
யெத்தனோா னல்லற்பட் டேங்குவே னெம்பெருமான்
சித்தமிரங் காயென் செயல். (நிங)

செயலொன்று மின்று திருவொற்றி யூர்வாழ்
புயலொன்று வேணிப் புனிதா - பயலொன்று
வெறபரசி யோடு மினிர்காட்சி தந்[illegible]
கற்பனையான் பாஙாய கா. (நி[illegible])

ரு



௩௨. திருவாரூர் பாதி திருவொற்றியூர் பாதி

காட்டுங் கதிரவனீ காணுங்கண் ணாயேனென்
மாட்டு விளங்கொளிநீ மாற்றினாற் - காட்டுதிற
மெங்கு விளக்குவா யீசாதென் னாரூரிற்
றங்கு முலகநா தா. (௫௫)

தாதாநீ யேநின்பாற் சார்ந்திரப்போன் யானுவந்து
நீதாவென் றேனென்னை நீக்கினா - லோதுகொடை
மற்றெங்குக் காட்டுவாய் மாதேவா வொற்றியூ
ருற்றபர மாபுகலே தோ. (௫௬)

ஓவென் றலறி யொளியடியேன் கண்ணிற்குத்
தாவென்றே னீதிரத்த ருனன்றோ - வேவினா
னென்றுசினந் தோன்றுவாயா யோப்பரவை யாமனைககேன்
சென்றாய் கமலையமுதே. (௫௭)

தேவர்பர வொற்றியூரச் செல்வாநின் செஞ்செவிக்கண்
மூவர்தமி ழோடியான் மொழிபுன்சொற் - பாவும்
புகுமேபா லோசையொடு புன்மா னொலியு
நகுமே யதனு ணயந்து (௫௮)

நயந்துகே ளாயே னவிலொருவிண் ணப்பம்
பயந்தவிர நின்பேர் பரித்தேன் - வயங்காரூ
ரெந்தாயான் கண்ணிழந்தே னென்றாலி யாவர்க்குந்
தந்தாய்நீ கண்ணிழந்தாய் தான். (௫௯)

தானக் களிற்றின் றலைமே லுலாப்போதும்
வானத் திறைபிரமன் மால்வாழ்வு - மேனத்தின்

கோடணிந்த வொற்றியூர்க் கோமானின் றொண்டுசெயும்
பாடணிந்த வாழ்விற்கொப் பா (௬௦)

பாடக்கண் பாவலர்க்குப் பண்டுதந்தா யின்றுன்னை
நாடக்கண் ணாயேற்கு நன்குதவி- னீடுன்
புகழ்புதிதா மாரூர்ப் புனிதா வஃதன்றி
யிகழ்பவரோ யாரு மிலர். (௬௧)

இல்லை யெனவிரந்தார்க் கீயாமை புண்ணியமோ
கொல்லைவிடை யூருங் குழகனே - நல்லை
யெனவுரைப்பார் நிற்கின்றே யீசனே யொற்றிப்
பனவனே யீத்துவக்கும் பண்பு. (௬௨)

பண்புடையெந் தாய்நாவற் பாவலற்குத் தோழமைகொ
ணண்புடையா னென்றுவிழி நல்கினாய் - நண்புடையே
னல்லே னெனினு மடிமையா னாரூர்வாழ்
நல்லா யெனக்கும்விழி நல்கு. (௬௩)

நல்குரவென் றொன்று நணுகாது நால்வர்க்குச்
சொல்குரவு பூண்ட சுடர்மதியான் - பல்குரவு
பாவைதரு மொற்றிப் பரமன் புகழ்பாடு
நாவையுடை யார்பா னயந்து. (௬௪)

நயனங் களிக்க நடனஞ்செய் நாதா
பயனங்கை வைத்த பரமா - வியனஞ்ச
முண்டவா ரூரா வுறுநோ யொழித்தென்னைக்
கண்டுகொள னிற்கே கடன் (௬௫)

கடனாஞ் சமுதாக்கக் கற்றாய் தமியே
னுடனாஞ் சனனோ யொழிக்க - விடையோனே
கல்லா யெனிலென் கரைவாய்தென் றொற்றிவாழ்
மல்லாயெல் லாம்வல்ல வா. (௬௬)

வாயே யுனக்கிதன்மேல் வாழ்வென்றொற் றூர்வாழ்
தாயே யனைத்துயிர்க்குந் தந்தையே - நாயேனைக்
காட்பாய் கருணைக் கடலேயென் றின்றமிழாற்
பாப்பாடிற் போமே படர். (௬௭)

படவரவத் தோடுபுலிப் பாதனுங்கண் டேத்த
நடவரவங் காட்டுகழ னம்பன் - றடமதில்சூ
ழொற்றியூர் மேவு மொருவற் பணிந்தேத்தும்
பற்றுளார்க் குண்டோ பயம். (௬௮)

பயம்மறியஞ் சென்னி பரித்தாய்வெற் பீன்ற
கயலவிழிபோர் பாகங் கலந்தாய் - வியனொற்றூர்
கம்பிககா தாகருணைக் கட்டியே நாயேனை
நம்பிககா தாகன் னலம். (௬௯)

நலமொன் றுனக்குரைப்பே னன்னெஞ்சே கேட்டி
பிலமொன் றரவணிந்த பெம்மான் - கலமொன்று
வாரிசூ ழொற்றியூர் வாழ்வான் பெருங்கருணை
நாரிபா கன்கழலே நம்பு (௭௦)

நம்பினே னுன்னை நழுவவிடேல் வெந்நோயால்
வெம்பினேன் வீதி விடங்கனே - தும்பிக்

கரத்தோனே யானுமொரு கான்முளைமண் ணுண்ட
சரத்தோ யருள்கமலை சா. (௭௧)

சார்ந்தோர்ப் புரக்குந் தயாநிதிநீ யேயெனமுற்
றோர்ந்தோர் சொலல்கேட் டுனையடைந்தேன் - வார்ந்தமலைச்
சாபாதெவ் வொற்றினா தாகாமுன் கூடலிலே
மாபாவி யைப்புரந்த வா. (௭௨)

வாழ்வுனக்கீ சன்புகழை வாழ்ந்தலே வன்னெஞ்சே
தாழ்வுனக்கன் றேன்புகழைச் சாற்றாமை - யேழ்புவியும்
போற்றுங் கமலைப் புராணனைவாய் வந்தபடி
சாற்றுறுதி யீதுனக்குத் தான். (௭௩)

தானே தனக்குச் சரியாநின் றண்மலர்க்கி
யானே சரண மடைந்தடிமை - யானே
னினியென் செயினுஞ்செ யெம்பெருமா னின்பங்
கனியொற்றி யூர்ச்சங் கரா. (௭௪)

கராவாய் மதலைவரக் கண்டாய்தென் னூர்ப்
பிராமனையாற் றிட்டசெழும் பீதம் - பராவக்
குளத்துவரச் செய்தாய் கொடியேன்கண் டந்தால்
வளத்தலையோ டொன்றுமம் மா. (௭௫)

மாதேவா வொற்றியூர் வள்ளா லடியார்செய்
கோதே கொளாதகுணக் குன்றமே - சூதேய்
முலையா ளமர்பாகா முன்னவா நீயே
னுலையா தருளை யுதவு. (௭௬)

உதரஞ் சுமந்த வுலகளந்தோன் மார்பத்
ததரஞ் சிவந்தா ளகலாக் - குதர
நிகர்மா ளிகையாரூர் நின்மலா வென்று
பகர்வார்துன் போடும் பறந்து. (எள)

பறவையூர் தேவர் பரவும் புனிதா
நறவையார் கொன்றையணி நாதா - வுறவை
யடையார் புரஞ்செற்ற வண்ணாறென் னொற்றி
யுடையா யெனையா ளுவந்து. (எஅ)

உவந்தால முண்டமர ரூர்புரந்த நம்பா
தவந்தானஞ் சற்றேனுஞ் சாரேன் - சிவந்தால
மன்னயமன் றேன்றி லறியேனா ரூரரசே
உன்னையன்றி வேறுதுணை யொன்று. (எகூ)

ஒன்றுபுகல் வேனன் றுணர்நெஞ்சே நீயுனக்கு
நன்று புரிதற்கு நாடினல் - வன்றிறன்மா
லேறுடையா னொற்றியூ ரெம்மான்றன் சென்னிமிசை
யாறுடையான் சீரையே யாய். (அ0)

ஆடரவக் கிண்கிணிக்கா லையா பிறையோடு
சூடரவச் செஞ்சடையாய் தொண்டர்சேர் - பாடரவ
மோவாத் திருவாரூ ருத்தமா நாயேனைக்
காவாமை நன்றோ கழறு. (அக)

கழல்பணியக் கல்லார் கருதுபுகழ் சொல்லார்
விழலுக் கிறைத்தே விளிவார் - குழன்மொழியாள்

வாமத்தான் றிங்கள் வளர்சடையான் பொன்னிதழித்
தாமத்தா னெற்றிநகர் சார்ந்து. (அஉ)

துன்பமெலா நீத்தோஞ் சுடுநோ யறத்துறந்தோ
மின்பமெலா மெய்த வினித்தடையெ - னன்ப
ருளத்தான்றென் னூர்வா ழும்பர்பிரா னஞ்சார்
களத்தான் புகழ்நாக் கலந்து. (அஙு)

கரத்தி லபய வரதங் கலந்தாய்
சிரத்திற் சிரமாலே சேர்த்தாய் - வரத்தை
யருளாயஞ் சேலென் றடியேனுக் கென்னே
தெருளாளா வொற்றியர சே. (அச)

சேலேந்தி னன்றீயத் தீத்த பழிதீர
வேலேந்தி னனை விதித்தவழற் - பாலவிழிப்
பித்தன் கமலேப் பிரானெதனற் றீர்ப்பானே
பத்தற் கருளாப் பழி. (அரு)

பழியஞ்சி யென்றொருபேர் பண்டுகொண்டா யன்பர்
வழியஞ்சி யஞ்சிக்கால் வைத்துக் - குழியஞ்சி
யாழப் புரிந்துபழிக் கஞ்சா னெனும்பழியின்
மூழ்கலொற்றி யாய்முறையா மோ. (அசு)

மோலிமுடி சூடி முறைநிறுவி னயரசாய்
நீலி யிடத்துவைத்த நின்மலா - சூலி
திருமுன் முறையிடுமென் செஞ்செவியே லாமை
தருமமோ வாரூரத் தா. (அஎ)

தாங்குமிமி லேறுச் சரமாத் துவசமா
வீங்கு முலைமனையா வெம்பணியிற் - றாங்கு
மொருவனைக்கொ ளொற்றி யுடையாய்நா யேனை
மருவடிமை யாக்கொள்ளு வாய். (அஅ)

வாரார் கயிலை மலையோ மறைமுடியோ
வேரார்பூங் கோயிலோ வெள்ளமோ - சீராரூர்த்
தம்பிரான் கங்கைச் சடையான்பூங் கொன்றையணி
யெம்பிரான் வாழு மிடம். (அகூ)

இடங்காவல் பூண்டாளுக் கெந்தாய்நின் சென்னி
மடங்காத காதலொடு வைகும் - தடங்கொங்கை
மின்னேயஞ் சொல்லேன் விளங்கொற்றி யூர்நம்பா
பின்னே தெனக்கருள்வாய் பேசு. (கூ0)

பேசேனீ யன்றிப் பிறதெய்வ முண்டென்று
கூசே னினையென்றுங் கும்பிடுவே - னேசேன்
பலியேற்று மென்றுரூர்ப் பண்ணவா னோயா
னலிவோட் டுவதெந்த நாள். (கூ௧)

நாளே வினையே நமனே நவக்கோளே
கோளே புரியவெனைக் கூடன்மின் - றாளே
யெனக் களித்தா னொற்றியூ ரெம்பிரா னென்புன்
மனக்குளிருப் பானென்றும் வந்து. (கூ௨)

வந்தேன் றிருமுன் மகிழ்ந்துபணிந் தேனமுதே
செந்தேனே கற்கண்டே சீனியே - நொந்தேனைக்

காவென்றே னருண்முக் கண்ணா வருளாது
போவென்றா லென்னே புகழ். (௪௩)

புகழ்ச்சிவிருப் பில்லார் புவனத்தில் யாரே
யிகழ்ச்சிவிருப் புள்ளா ரெவரே - புகழ்ச்சி
விரும்பினையே லெற்கா விமலாதென் னெற்றிய
சுரும்பினைபோர் சொல்லாள்பா கா. (௪௪)

பாகங் கலந்தமலைப் பாவைபாய் பாவைமார்
மோகங் கலந்தழுழு மூடனேன் - மோகங்
கலந்தபிணி நீக்கவருண்முன் காண்முன்றாய் யான்றோ
நலந்தழையு மாரூரண்ணா. (௪௫)

அண்ணாதென் னெஞ்சியூ ராண்டவா செந்தமிழாற்
பண்ணார் கவிபாடிப் பாவலர்க - ளண்ணா
விரக்கிலெதிர் பேசாதொன் றீயா திருந்தாற்
புரக்கும்வள்ளற் கீதொருபண் போ. (௪௬)

போதன் பணியாதன் புண்ணியன்றென் கமலை
நாதன் றிருநாவ லூரர்க்குத் - தூதன்
கலங்குமெளி பேற்கருளாக் காரணமென் னன்றோ
துலங்கு மருளைச் சுமந்து. (௪௭)

சுமந்தா யருளைச் சுடுநோய் தொலைக்காய்
சமந்தா னிதுவோ கழறாய் - நமன்றா
னருளவுதைத் தாயொற்றி யூரா யுலக
மருளவதெங் குக்கொட்டு வாய. (௪௮)

வாயாரப் பாடி மனநெகிழச் சிந்தித்து
நோயாலந் தோவின்னு நோவேனோ - தீயாரைப்
பாடிப் பரிசுபெறாப் பாவியோ யான்மன்றத்
தாடிமகி ழூங்கமலே யாய். (௯௯)

ஆய்ந்தவன்பர் கூடிக்கூத் தாடிப்பே ரானந்தந்
தோய்ந்துமகி ழொற்றியூர்த் தொன்னகரில் - வாய்ந்தபர
னூர்ந்தபுகழ் பாடு மறிஞரில்லந் தோறுமென்றுஞ்
சேர்ந்து மகிழுந் திரு. (௧௦௦)

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருக்கமலை யொடுமொற்றித் திருநகர்வா
 ழருட்செல்வத் தியாகே சன்றெண்
டருக்கமலை யிரந்தளித்தோ னருக்கமலை
 யணிவேணி யண்ணன் மீதே
இருக்கமலைச் சிரகிரிவாழ் தியாகரா
 சக்கவிஞ னெம்ம னோர்தம்
வருக்கமலை வறவன்பின் முதற்பாவந்
 தாதியொன்று வகுத்தான் மன்னோ.

ஆரூரி னொடுமொற்றித் திருநகரிற்
புற்றிடங்கொண் டமர்ந்தே யாழித்
தேரூருந் தியாகேச னிருந்தாடுஞ்
செயற்கேதுத் தெரியி னிந்த
வூரூரும் புகழ்த்தியாக ராசசா
வலனம்பி னியம்பு செப்பற்
சீரூரு மின்றுதியை முன்மறிந்த
மகிழ்வென்று செப்ப லாமால.



திருவாரூர் பாதி திருவொற்றியூர் பாதி வெண்பாவந்தாதி.

முற்றிற்று.



உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர் மருந்து வெண்பாமாலை.

காப்பு.

சீர்பூத்த வாரூர்த் தியாகேச னைத்துதிக்க
நார்பூத்த விக்கினசா னளியருளு - மேர்பூத்த
ஐங்கரநால் வாய்முக்கண் ணூர்ந்தருளி யம்பார்ந்
மங்களஞ்செய் தெய்வ மருந்து.

சமயாசாரியர்.

தியாணரி தீர்க்குந் திரைபுரந்து வாழ்மருந்து
வாபாசெய் னும்பேர்பொரண் மாமருந்து - பாயவிரி
மாசநலப பாடுசா வன்மருந்து மாணிக்க
வாசகட்பே ரூண்ட மருந்து.

நூல்.

திங்களணி வேணித் தியாகேச னென்னும்பேர்
தங்கப் புனைந்த தனிமருந்து - துங்கத்
திருவந் தரும்மருந்து செய்யமறைச் சென்னி
மருவுமருந் தாரூர் மருந்து. (௧)

கொன்றை யணிந்த குணமருந்தன் பர்க்கென்று
நன்று மகிழ்ந்துபுரி நன்மருந்து - குன்றாத
காட்சியடி யேற்கருளுங் கண்மருந்து கல்வியான்
மாட்சிபெறு மாரூர் மருந்து. (உ)

மால்பிரமன் காணாத மாமருந்து தற்புகழு
நூல்பலவாய்ந் தோர்பிறவி நோய்மருந்து - காலற்காய்ந்
தெள்ளுத லில்லா வெழின்மருந் தேற்றவர்க்கு
வள்ளலா மாரூர் மருந்து. (ந)

தேவர்க் கரிய திருமருந்து தென்றமிழான்
மூவர் பரவு முதன்மருந்து - காவார்
கரமருந்தென் கண்ணேய் கரக்குமருந் தென்றும்
வரமருந்தா மாரூர் மருந்து. (ச)

நீறு புனைந்த நிமலமருந் தோவாது
நாறுகுழல் பால்வைத்த நன்மருந்து - வேறுதுணை
யில்லாப் பெரிய வெழின்மருந்தெல் லாஞ்செய்ய
வல்லதா மாரூர் மருந்து. (ரு)

மாலேற்றிற் காட்சிதரு மாமருந்து செங்கையில்
வேலேற்ற கான்முளையின் மெய்மருந்து - காலேற்ற
சென்னியா ரேத்துந் திருமருந்தெல் லாநோய்க்கும்
வன்னியா மாரூர் மருந்து. (சு)

பெண்ணையிடப் பாற்கொள் பெருமருந்து தன்வயிற்றின்
மண்ணைவைத்த வேற்றில் வருமருந்து - கண்ணை

யகழ்ந்தவன்பர் கண்ட வருமருந்தெல் லோரு
மகிழ்ந்துகொளு மாரூர் மருந்து. (௭)

ஆவணங் காட்டி யடிமை கொளுமருந்து
கோவணங்கள் ளத்திற் கொளுமருந்து - தாவாக்
கதியடியார்க் கீந்து களிக்கு மருந்து
மதிமுடித்த வாரூர் மருந்து. (௮)

அன்பர்துயர் காணு வருமருந்து தாள்பணியா
வன்பர்துயர் மாற்று மருந்துமே - யின்பம்
பயக்குமருந் தோர்நால்வர் பாடுமருந் தென்னுண்
மயக்கறுத்த வாரூர் மருந்து. (௯)

வெள்ள முடித்தசடை மெய்மருந்து நாயடியே
னுள்ளப்பூங் கோயி லுறைமருந்து - கள்ள
மிருவா வுளத்தார்க் கினிக்குமருந் தின்னன்
மருவாத வாரூர் மருந்து. (௧௦)

காமனைக் காய்ந்தநுதற் கண்மருந்து கூடலிலே
மாமனாய் வந்து வழக்குரைத்த - தேமருந்து
கன்னியோர் பாகங் கலந்தமருந் தங்கையிலே
வன்னிவைத்த வாரூர் மருந்து. (௧௧)

மான்மழு வங்கைமிசை வைத்த தனிமருந்து
தேனமர்பூங் கொன்றைத் திருமருந்து - கானமர்ந்த
வேட்டுவனா ருடனே மிசைந்தமருந் தென்பிறவி
வாட்டுமருந் தாரூர் மருந்து. (௧௨)

கந்தரத்து நீலங் கலந்தமருந் தின்கவிசொல்
சுந்தரர்க்குக் கண்ணைப் தொலைத்தமருந் - திந்துமுடி
யார்ந்தமருந் தம்பலத்தி லாடுமருந் தோயாது
வார்ந்தபுக ழாரூர் மருந்து (௧௩)

கண்டக் கறைமருந்து கான்மலர்சேர் மாணிக்சாந்
தண்டதரற் காய்ந்த தனிமருந்து - துண்டப்
பிறையணிந்த சென்னிப் பெருமருந்து தூய
மறைபுகழு மாரூர் மருந்து. (௧௪)

வெம்பணியிற் றுஞ்சும் விடைமருந்து மெய்யடியார்
நம்ப வருள்புரியு நன்மருந்து - கம்பக்
களிறுரித்த கைமருந்து காமன்றே ராய
வளிதவழு மாரூர் மருந்து. (௧௫)

அப்பர்குடர் நோய்தீர்த் தருண்மருந்து பாண்டியன்மெய்ப்
வெப்பொடுகூ னுந்தீர்த்த மெய்மருந்து - துப்பினையே
யொத்த சடிலமருந் தும்பர் தொழுமருந்து
மத்தமுடி யாரூர் மருந்து. (௧௬)

என்னைப்பெண் ணைச்செ யெழின்மருந்து சுந்தரர்மெய்த்
துன்னைத் தவிர்த்தருளுந் தூயமருந் - தன்னை
யிழவார் பிறப்பறுக்கு மின்மருந்திற் றேறு
மழவார்தென் னாரூர் மருந்து. (௧௭)

விண்மணியைக் கண்ணாக்கொண் மெய்மருந்து நாயடியேன்
கண்மணிக்கு முன்னொளியைக் காட்டுமருந் - தெண்ணுமணி

கண்டனென் வண்டர் கரைமருந்து சோலைதொறும்
வண்டமர்தென் னாரூர் மருந்து. (௧௭)

தாமரையோன் சென்னி தடிந்தமருந் தென்பிறவி
நாமலைய வோட்டு நலமருந்து - தேமலர்ந்த
பூவடியென் சென்னி பொருந்துமருந் தேகம்ப
மாவடிவா ழாரூர் மருந்து. (௧௯)

கண்சுமந்த நெற்றிக கவின்மருந்து வந்திக்கா
மண்சுமந்து பிட்டுண்ட மாமருந்து - பண்சுமந்த
சாமம் பரவுந் தனிமருந்து வெப்பரசி
வாமஞ்சா ராரூர் மருந்து. (௨௦)

பாம்பும் புலியும் பணிமருந்து பாண்டியனைப்
வேம்பணிய றுங்கும் வியன்மருந்து - காம்பனைய
தோண்மா தொருபாகந் தோயமருந்து கண்ணுப
வாண்மாத ராரூா மருந்து. (௨௧)

இந்திரன் போற்று மெழின்மருந்தீ ரெண்கலைசேர்
சந்திரனைத் தேய்த்த தனிமருந்து - மந்திரமா
மஞ்செழுத்துள் வாருக கருண்மருந்து வாழ்பவாகள்
வஞ்சமகற் றாரூர் மருந்து. (௨௨)

தாரணிந்த கொன்றைச் சடைமருந்து வாமந்து
வாரணிந்த மென்முலையாள் வாழுமருந் - தேரணிந்த
வேதமுடி வைகும் வியன்மருந்து வென்றசீர்
மாதவர்வா ழாரூர் மருந்து. (௨௩)

பைவைத்த பாம்புப் பணிமருந்து பாணருக்காத்
தெய்வக் கவியெழுது சீர்மருந்து - மைவன்பர்க்
கெய்தப் பொருந்தா வியன்மருந்து கந்தரத்து
மைவைத்த வாரூர் மருந்து. (உச)

வேளைப் பொடித்த விழிமருந்து வெற்பெடுத்தான்
றோளை நெரித்த சுடர்மருந்து - தாளைப்
பரவுமடி யார்துன்பம் பாற்று மருந்து
வரமருளு மாரூர் மருந்து. (உரு)

சூலப் படைசுமந்த தொன்மருந்து பாகத்தி
லேலக் குழலியம ரின்மருந்து - கோலத்
திருப்பதத்தின் மால்விழிசேர் சீர்மருந்து வன்றி
மருப்பணிந்த வாரூர் மருந்து. (உசு)

உழுவை யுரிவை யுடுத்த மருந்து
வழுவையுரி போர்த்த மருந்து - கழுவிற்
கொடியவரை யேற்று குணமருந்து செந்தேன்
வடியிதழி யாரூர் மருந்து. (உஎ)

தேமா நிழலிற் சிறந்த திருமருந்து
பூமாது போற்றும் புகழ்மருந்து - கோமான்
முகுந்தன் கண்ட முதன்மருந்தங் கையில்
வகுவேந்து மாரூர் மருந்து. (உஅ)

கள்ளார்ந்த வாத்தியடி காத்தமருந் தன்பர்க்கு
வெள்ளானை யீந்த வியன்மருந்து - நள்ளார்

புரமெரித்த மூரற் புகழ்மருந்தி யாரும்
வரமுகக்கு மாரூர் மருந்து. (உகூ)

கற்றூர் புகழுங் கவின்மருந்து காழியர்க்குப்
பொற்றாளந் தந்த பொருவின்மருந் - தற்றூர்க்
கிருநிதியாய்க் காக்கு மியன்மருந்து சார்ந்தோர்
மருளகற்று மாரூர் மருந்து. (௩௦)

சேற்கொடியன் சூரலடி சேர்மருந்து புற்பறழைப்
பாற்கடல்கூ யுண்ணப் பணித்தமருந் - தேற்க
நுளையர்குலப் பெண்வேட்ட நோன்மருந்து கூடல்
வளையலவிற்ற வாரூர் மருந்து. (௩க)

தேசம் புகழுந் திருமருந்து தேங்கொன்றை
வாசம் பொலிவேணி மாமருந்து - பாச
மகழ்வுபா ருள்ளத் தமரு மருந் தொற்றி
மகிழ்டிவா மாரூா மருந்து. (௩உ)

மண்ணெடுவிண் ணீண்டு வளர்மருந்து வான்கவிஞ
ரெண்ணுஞ்செந் நாவிருக்கு மின்மருந்து - பண்ணோ
டிசைபாடித் தெவ்வோட்டு மின்பமருந் தாரும்
வசைபாடா வாரூர் மருந்து. (௩௩)

சேந்தன் றவிட்டமுதுண் சீர்மருந்து பூஞ்செல்வி
காந்தனுக் காழிதந்த காமர்மருந் - தேந்து
கொடியில் விடைவைத்த கோமருந்து கற்போர்
மடியடையா வாரூர் மருந்து. (௩௪)

பெற்றமுவந் தேறும் பெரியமருந் தெக்கலையு
முற்றவுணர்ந் தோருணரு முன்மருந்து - நற்றவத்தோர்
சூழுமருந் தோரிரண்டு தூயசெல்வ நல்குமின்னூர்
வாழுந்தென் னாரூர் மருந்து. (௩௫)

வேதப் பரியுகைத்த மெய்மருந்து வேகவதி
பாதமலர் நாறப் படர்ந்தமருந் - தோத
வுலவாப் புகழ்மருந் துத்தமர்க்குத் தீய
மலமாற்று மாரூர் மருந்து. (௩௬)

மாயப் பகழிகொண்ட மாமருந்து வஞ்சர்புரந்
தீயக் குறுமுறுவல் செய்மருந்து - தூயகதி
நல்கு மருமருந்து நாடும் பெருஞ்செல்வ
மல்குந்தென் னாரூர் மருந்து. (௩௭)

கண்ணுக் கினிய கவின்மருந்து காமர்மலைப்
பெண்ணுக் குயிராம் பெருமருந்து - விண்ணமரர்க்
காவி யுதவுமருந் தால மயின்மருந்து
வாவிசூ ழாரூர் மருந்து. (௩௮)

வீதி விடங்கனெனு மெய்மருந்து தூதாகிப்
பாதமலர் நோவப் படர்ந்தமருந் - தோதி
யுணர்ந்தா ரறிந்தமருந் தும்பரெலாம் வாழ்த்தி
வணங்குந்தென் னாரூர் மருந்து. (௩௯)

தேவி மகிழத் திருநடனஞ் செய்மருந்து
பாவியேன் கண்ணேயைப் பார்க்குமருந் - தோவி

லருளே திருமேனி யாக்கொண் மருந்து
மருளேயா வாரூர் மருந்து. (சo)

வானும் புவியும் வணங்குமருந் தன்பர்க்குத்
தேனும்பா லும்போன்ற சீர்மருந்து - கூனுங்
குருடுந் தவிர்மருந்து குத்தரமான் கொங்கை
வருடுங்கை யாரூர் மருந்து. (சக)

வரத்தைய டியார்க்கருளும் வான்மருந் தங்கி
கரத்தைத் தடிமருந்து காவற் - புரத்திற்
றயித்தியரைச் சாடுந் தனிமருந்து வேளூர்
வயித்தியனு மாரூர் மருந்து. (சஉ)

எய்யாப் புகழ்மருந் தேத்தித் தொழுமடியார்
கையா தருள்புரியு நன்மருந்து - வெய்ய
ரடைய வரியமருந் தற்றூர்க் கினிய
மடையருளு மாரூர் மருந்து. (சஙு)

இரந்தமலை வன்றொண்டர்க் கிட்ட மருந்து
பரந்தமலைப் பாவைமுலைப் பாலைச் - சுரந்தன்பிற்
காழிமழ வுக்கருத்தக் கண்டமருந் தண்டரெலாம்
வாழியவென் றாரூர் மருந்து. (சச)

வீழி மிழலையிடை மேவியவா கீசருக்குங்
காழியர்கோ னுக்கும்பொற் காசளித்த - பாழிமருந்
தும்ப ரமுதுணவுஞ் சுண்மருந்து பூஞ்சோலை
வம்புசெறி யாரூர் மருந்து. (சரு)

மன்னும் கயிலை மலைமருந்து வான்மதிய
மின்னுஞ் சடைமுடியில் வேய்மருந்து - முன்னுந்
தனையிரந்தோர்க் கீயுந் தனிமருந் தன்பர்
மனையிரந்த வாரூர் மருந்து. (சசு)

ஏடாற் றெதிரேற்று மின்மருந்து தன்னையென்று
நாடார் துயர்நாடா நன்மருந்து - பீடார்
தலைவளைத்துத் தாடகைகைத் தார்கொண் மருந்து
மலைவளைத்த வாரூர் மருந்து. (சஎ)

நதிவிரவு சோறு தருமருந்தப் பர்க்கு
விதிமுடியைக் கொய்மருந்து மேலா - நதிமுடியிற்
றாங்குமருந் தொண்கலத்திற் றுபநமின் னார்பிச்சை
வாங்குமருந் தாரூர் மருந்து. (சஅ)

தைப்பூச மாடத் தகுமென் றருண்மருந்து
மெய்ப்பூசு நீற்று வியன்மருந்து - கைப்போதில்
மானேந் தியமருந்து மாமதப்பைப் பூம்பொழில்கள்
வானேந்து மாரூர் மருந்து. (சகூ)

ஓடு கவர்ந்திளமை யோரன்பர்க் கீந்தமருந்
தேடுகனல் வேவா தியற்றுமருந் - தோடு
மரிபரியாச் செய்மருந்து நாவலர்பா டுஞ்சீர்
வரிபுனைந்த வாரூர் மருந்து. (ருo)

கண்களிக்குங் காட்சிக் கவின்மருந்து காரிமயப்
பெண்களிக்கும் பாகப் பெருமருந்து - விண்களிக்க

வால மயின்றமருந் தம்பொன் னடியடைந்தார்
மாலகற்று மாரூர் மருந்து. (ருச)

இருந்தாடி யின்பெவர்க்கு மீயு மருந்து
பொருந்தாரூர் சுட்ட புகழ்சேர் - மருந்துமலர்த்
தாட்குறி யன்பர் தலைக்கருளித் தன்றலையில்
வாட்குறிகொள் ளாரூர் மருந்து. (ருஉ)

மண்முனிரு நான்குருவம் வாய்ந்த தனிமருந்து
கண்மூன் றுடைய கவின்மருந் - தொண்மாழை
செங்கலைச் செய்மருந்து தேவர் தொழுமருந்து
மங்கலிலா வாரூர் மருந்து. (ருந)

குன்றுசிலை யாக்கொள் குணமருந்து வேதநெடு
கன்றுகுணி லாக்கொண்டோன் காணுமை - னின்றுதழ
லோங்கலா யோங்கி யொளிருமருந் தம்மைக்கு
மாங்கனிநல் காரூர் மருந்து. (ருச)

பாசு பதவாளி பார்த்தற்கு நல்குமருந்
தேசலிலா ஐய ரிசைக்குருகு - மாசின்மருந்
தின்னலடி யார்க்கிசையா வின்மருந்தின் பேயுருவாய்
மன்னுமருந் தாரூர் மருந்து. (ருரு)

புற்றிடங் கொண்ட புகழ்மருந்தென் புன்பவநீர்
வற்றிடச் செய்த வளமருந்து - கற்றுப்
புரந்த கணைமருந்து பொன்குளத்திற் கொள்ள
வரந்தந்த வாரூர் மருந்து. (ருசா)

நம்பினோ னர்க்கை நழுவவிடா நன்மருந்து
வெம்பினேன் வெந்நோயை வீட்டுமருந் - தெம்பிரா
னென்னப்பூங் கோயி லிருக்குமருந் தோரைந்து
வன்னத்தென் னாரூர் மருந்து. (டுஎ)

மதிசேர் சடைமருந்து வன்றொண்ட னார்க்குப்
பொதிசோறு தந்த புகழ்சேர் - நிதிமருந்து
நாளைப்போ வார்கா ணந்திவிலக் கும்மருந்து
வாளைச்செய் யாரூர் மருந்து. (டுஅ)

புத்தன் றலையிலிடி வீழப் புரிமருந்து
முத்தனென வேத மொழிமருந்து - சித்தனைக்
கல்லானை தின்னக் கரும்பு தருமருந்து
மல்லார்தென் னாரூர் மருந்து. (டுகூ)

தூசொலிக்குங் கன்மோதுந் தொண்டர்தலை தாங்குமருந்
தேசொலிகே ளாச்செவிகொ ளின்பமருந் - தாசை
யுடுத்தமருந் தண்டங்கீண் டோங்கு மருந்து
வடுத்தவிர்த்த வாரூர் மருந்து. (சுO)

பன்றிபுவி கீண்டறியாப் பாத மலர்மருந்
தொன்றியொன்று விண்பெற் குதவுமருந் - தென்று
மழியாப் புகழ்மருந் தன்பொலாஞ் சென்னல்
வழிதேற்று மாரூர் மருந்து. (சுக)

அப்பூதி யார்சேயை யண்ணுவிடந் தீர்த்தமருந்
தொப்போ துறுநின்ற வூர்ப்பூச - நப்பின்றிச்

செய்தமனக் கோயில்குடி சேர்மருந்து செங்கையிலே
வைபமர்கூ லாரூர் மருந்து. (சாஉ)

இன்பமழ வன்புதல்வி யெய்துநோய் தீர்த்தமருந்
தன்பர் பணியா லடைந்தகொடுங் - துன்பகலப்
பண்ணு மருமருந்து பாவியேன் கண்மாசு
மண்ணுமருந் தாரூர் மருந்து. (சாரு)

ஈசனென வோர்மொழிப்பே ரெய்து மருமருந்து
வாசமலர்க் கொன்றை வனைந்தமருந் - தாசில்
குருமருந் தின்பங் கொடுக்குமருந் தொண்சீர்
மருவுமருந் தாரூர் மருந்து. (சாச)

தாயிரங்கா யென்னத் தகுமருந்து சம்பந்தர்க்
காயிரஞ் செம்பொ னருண்மருந்து - நோயோ
டிருந்து வருந்துவர்முன் னெய்தியநோய் தீர்க்கு
மருந்துதிரு வாரூர் மருந்து. (சாரு)

குவிகைசிரங் கொண்டடியார் கூத்தாட முத்துச்
சிவிகை கவிகைதிருச் சின்னம் - புவிபுகழ
வாளுடைய பிள்ளையார்க் கன்றருளிச் செய்மருந்தொண்
வாளுடைய வாரூர் மருந்து. (சாசா)

விற்கொண் டடித்த விசயற் கருண்மருந்து
கற்கொண்ட சாக்கியனார் கண்டமருந் - தற்கொள்
களமருந்து சோழன் கவினாரம் பூண்ட
வளமருந் தாரூர் மருந்து. (சாஎ)

சமரிற்கை தோற்றிக் கழுத்தரிகை பற்றித்
தமராய்த் தடுத்துவிடேற் சத்த - மமர
வெழுப்பிவிடைக் காட்சியன்பர்க் கீந்தமருந் தென்றும்
வழுத்தவிர்ந்த வாரூர் மருந்து. (சஅ)

கற்புணையாற் சொற்கோன் கடலேறச் செய்மருந்து
மற்புணைபூ தத்தான் மலைபோன்ற - நெற்குவையை
வீடுமறு கெங்குநிறை வித்தமருந் தொண்சிகரி
மாடுபுனை யாரூர் மருந்து. (சகூ)

வீயாச் சிரகிரியின் மேயசெட்டிப் பெண்ணுக்கு
மாயாத் தயில மருந்தேந்தித் - தாயாய்வந்
தன்பாய் மருத்துவஞ்செ யான்றமருந் தொண்கடல்சூழ்
மன்பார்சொ லாரூர் மருந்து. (எ0)

சன்றிழந்த வாவிரக்கங் கண்டுதே ரூர்ந்தசேய்க்
கன்றுயிர் தந்தமருந் தாரூரர்க் - கொன்று
மருச்சனைபாட் டென்ற வருமருந்து சோலை
மருச்செறிதென் னாரூர் மருந்து. (எக)

காலன்சன் றுகக் கறக்கும் பசுவாகி
மேயல வுலாய வெழின்மருந்து - சால
விறுகு மனத்தேற் கிரங்குமருந் தந்தேர்
மறுகுதிக ழாரூர் மருந்து. (எஉ)

சலத்திற் படைத்த கறிமீண்டு சேயாய்
நலத்தின்வரச் செய்மருந்து நந்தன் - குலத்தி

லுயர்மறையோ னுப்த்தா னுறச்செய் மருந்து
மயர்வகற்று மாரூர் மருந்து. (எரு)

காட்ட மறைக் காட்டிற் கதவுதிறக் கும்மருந்து
மீட்டக் கதவடைக்கு மெய்ம்மருந்து - வேட்ட
வதிபத்தர் பொன்மீன்பெற் றுண்டமருந் தன்பர்
வதியுற்ற வாரூர் மருந்து. (எச)

பொய்யா மருந்து புனல்கூ டியமருந்து
மெய்யார்க் கொளியாய் மிளிர்மருந்து - நையா
வுளத்தரர்க் கிருளா யொளிக்குமருந் தின்ப
வளத்தாலா ராரூர் மருந்து. (எரு)

அண்டி வணங்கா வமணர்குரு டாபோடத்
தண்டியடி கட்கிருகண் டந்தமருந் - துண்டிவிரா
நஞ்சமுதா நாவரசர் நன்சருந்தச் செய்மருந்து
மஞ்சுதிக ழாரூர் மருந்து. (எசு)

சொல்லரசை மாவேழந் சூழ்ந்துவணங் கிச்சமணர்க்
கொல்லத் திருப்பு குணமருந்து - பல்லவனைச்
சைவக் கரையேற்று தண்மருந்தன் பர்கருமல
மைவிலக்கு மாரூர் மருந்து. (எஎ)

நீற்றறைவா கீசருக்கு நீர்வாவி யாயிளந்தென்
காற்று யமுதகலைமதியாய்த் - தோற்றிச்
சுகஞ்செய்யச் செய்மருந்து தொன்மறையோர் கூடி
மகஞ்செய்யு மாரூர் மருந்து. (எஅ)

 திருவாரூர் மருந்து வெண்பாமாலை.

திருக்கயிலைக் காட்சிதரி சிக்கக்கை காண்மார்
புருக்கலையச் சென்றவைப்பர்க் குந்தத் - திருக்காட்சி
யையாற் றருளுமருந் தங்களத்தில் வெப்யகடு
வையாற்று மாரூர் மருந்து. (எக)

தந்தைக் கொலைசிவ தர்மமாச் சேய்ஞலூர்
வந்தபிள்ளை யார்க்கருளு மாமருந்து - சுந்தரர்முன்
றாற்றினிலிட் டுக்குளத்தி லாய்ந்தெடுத்த பொன்சேயான்
மாற்றுரைத்த வாரூர் மருந்து. (அ0)

சேரர் பெருமாளுர் செய்ம்மும் மணிக்கோவை
யேரமையக் கேட்டமருந் தேயர்கோன் - சீர்வயிற்றுச்
சூலைநம்பி போய்த்தீர்க்கச் சொன்மருந்து செங்கழுநீர்
மாலைபுனை யாரூர் மருந்து. (அக)

சீர்த்தி மதுரையிற்கை தேய்த்ததிருத் தொண்டரா
மூர்த்திக் கரசளித்த முன்மருந்து - பூர்த்திநமி
நந்திநீ ரால்விளக்கு நன்கெரிக்கச் செய்மருந்து
வந்துவிண்சூ ழாரூர் மருந்து. (அ௨)

மாமணத்தின் மானக்கஞ் சாறனுர் மாமகளார்
பூமணக்குங் கூந்தனம் பூணூலுக் - காமென்
றரிந்து வளர் வித்த வருமருந்து நாகம்
வரிந்தவனை யாரூர் மருந்து. (அ௩)

அன்புருவாங் காரைக்கா லம்மைதிரு வந்தாதி
யின்புறக் கேட்ட மருந் தோர்முரு - கன்பூண்டி

யிற்கவர்ந்த பொன்னம்பி பேத்தத் தருமருந்த
மற்கலந்த வாரூர் மருந்து. (அச)

உதியர்பிரான் வன்றொண்ட ரோடையா ரேக
நதிவிலகி மேற்புறத்தி னண்ணி - வதியுதவ
வாற்றுமருந் தொண்மன்றத் தாடுமருந் தென்கவலை
மாற்றுமருந் தாரூர் மருந்து. (அரு)

தாலி கொடுத்தெறிரோ சார்குங் கிலியத்தை
பேலக் கொடுதாப மிட்டுவந்த - நாலணிந்த
மார்பனாயிற் சென்றுண்க மாவென்ற நன் மருந்து
வாரபுகழா ராரூர் மருந்து. (அசு)

கழுத்திற் கயிறு கலையனார் பூண்டன்
றிழுத்தபினோர் நின்றமருந் தியாரும் - வழுத்தக
குருந்தடியில் வாதவூர்க் கோமானை யாண்ட
மருந்துதிரு வாரூர் மருந்து. (அஎ)

ஆரூர்ப் பிறந்தார்க ளாருநமி நந்திகஞ்
சீரூர் கணங்களெனச் செப்புமருந் - தேரூரு
மாண்டனை காய்க்க வருளுமருந் தாரருர்சேர
மாண்பகலா வாரூர் மருந்து. (அஅ)

வேனில்வெப் பந்தவிர வெள்ளியமுத் தின்பந்தர்
மேனிழற்ற வேணுபுர வேந்தாகுத் - தானளித்த
தண்மருந்து சங்கத் தமிழ்ப்புலவ ரோடாய்ந்த
வண்மருந் தாரூர் மருந்து. (அகூ)

நாகைக்கா ரோணத்தி னுவலூர் நம்பிக்கு
வாகைப் புரவிமணி மாலைமுத - லோகையொடு
தந்த மருந்திளைசை சார்மாறர் முன்பசித்து
வந்தமருந் தாரூர் மருந்து. (௬0)

இந்தனந் தாங்கி யெழின்மதுரை மாமறுகில்
வந்து விலைபகர்ந்த மாமருந்து - சந்தமலி
போதந் தருமருந்து பூவணத்திற் சென்றிரத
வாதஞ்செ யாரூர் மருந்து. (௬௧)

ஆறு சுவையமுத மன்பின் முகமனொடு
நாறு குழற்கௌரி நன்கூட்ட - வீறுபெற
வுண்ட முதியமருந் தொண்காளை யாய்மழுவா
மண்டழகா ராரூர் மருந்து. (௬௨)

மலையத் துவசன்பொன் மாலையோ டாட-
வலையத்தி யோரோ டுழைத்த - நிலைமருந்
தட்டசித்தி மாத ரறுவர்க் கருண்மருந்து
மட்டவிழ்தா ராரூர் மருந்து. (௬௩)

சிங்கத்தைச் சிம்புளாய்ச் செற்றமருந் தண்டருட
லங்கத்தைப் பூண்ட வருமருந்து - திங்களொடு
கங்கை யணிமருந்து காமா மலைபயந்த
மங்கைசே ராரூர் மருந்து. (௬௪)

மாமை திகழ்மருந்து மாலைத் துழாயணிந்த
வாமை முதுகோ டணிமருந்து - காமனுயி

ரன்பிரதி வேண்ட வருண்மருந்து வீதிதொறு
மன்றுதிக ழாரூர் மருந்து. (௯௫)

வழுவா லெறிபத்தர் மாய்த்தகைம்மாப் பாக
ரெழுமா றருளுமருந் தின்பின் - வழுவா
வலர்சீர்ச் சிவகாமி யாண்டார்பூங் கூடை
மலர்சேர்ந்த வாரூர் மருந்து. (௯௬)

சிலந்தி யரசாய்க்கோச் செங்கண்ண னென்று
நலந்திகழத் தோன்றியன்பு நண்ணி - வலந்திகழ
வாக்குதவி தேவி யமரு மருமருந்து
மாக்கவின னாரூர் மருந்து. (௯௭)

கலம்பொலியுஞ் சேரபிரா னன்குறளப பாதச்
சிலம்பொலிகேட் பித்தருளின செல்வ - வலம்பொலிநன்
ஞவலூர்ச் சேரனன்பு நல்குமருந் தம்பொழிலவாய்
மாவலூ ராரூர் மருந்து. (௯௮)

திருமருநற் செட்டிவிடந் தீர்ந்துய்யச் செய்த
வருமருந்து வேணுபுரத் தன்பாக - விருந்திதீந்
தோடள கனைசேர வுந்துமருந் தம்பொன்செய
மாடமலி யாரூர் மருந்து. (௯௯)

திருமருந்து வேதச் சிரமருந்தா னந்தந்
தருமருந்தென் கண்ணேப் தவிர்க்கு - மருமருந்து
தேமருந்து சேருந் தியாகேச னென்னும்பே
ராமருந் தாரூர் மருந்து. (௧00)

பயன்.

மருந்துமருந் தென்றுகவி மாலை புனைந்தேன்
வருந்துமெளி யேனின்னல் மாற்றி - யிருந்தன
பெருமா புகழ்பாடும் பேராத செல்வம்
தருமாரூர வாழ்தியாகே சன். (௪0௬)

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.


திருந்துபுக ழாரூரத் தியாகேசன் றன்னை
மருந்து மருந் தென்றினிது வாழ்த்திப் - பொருந்துதுதி
சாற்றுந் தியாகரா சக்கவிஞற் கியாமெல்லா
மாற்றுங்கைம் மாறிலையா மால.

திருவாரூர் மருந்து வெண்பாமாலை

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

—:0:—



தியாகேசன் திருவடி வாழ்க.